செய்தி வெளியீடு எண்:1076 நாள்:10.11.2021

## செய்தி வெளியீடு

## பருவமழை பாதிப்புகளை எதிர்கொள்ள 12,000–க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர் என மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில் பாலாஜி அவர்கள் தகவல்

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு V செந்தில்பாலாஜி அவர்கள் இன்று (10.11.2021) சென்னை, ஓட்டேரி, குக்ஸ் ரோடு 110/33/11 கி.வோ துணை மின்நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் இருந்தனர்.

துணைமின் நிலையத்தில் ஆய்வு செய்த பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு மின்சாரத் துறையின் சார்பில் பருவமழை காலங்களில் சீரான மின் விநியோகத்தை வழங்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, உரிய வகையில் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சென்னையில் இருக்கக்கூடிய 34,047 மின்மாற்றிகளில் 34,006 மின்மாற்றிகள் மின் செயல்பாட்டில் உள்ளன. 41 மின்மாற்றிகளின் மின் விநியோகம் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி நிறுத்தப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள 44 இலட்சம் மின் இணைப்புதாரர்களில் 1,992 மின் இணைப்புதாரர்களுக்கு மட்டும் மின் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகின்ற காரணத்தினாலும், தேங்கியிருக்கின்ற மழைநீரை அகற்றும் பணி நடைபெற்று வருகின்ற காரணத்தினாலும் இந்த பகுதியில் மட்டும் மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, வியாசர்பாடியில் 7 மின்மாற்றிகளும், எழும்பூரில் 26 மின்மாற்றிகளும், தி.நகரில் 3 மின்மாற்றிகளும், அண்ணாநகர் பகுதியில் 3 மின்மாற்றிகளும், அம்பத்தூர் பகுதியில் 2 மின்மாற்றிகளும் என 41 மின்மாற்றிகளில் மின் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் பருவமழையை எதிர்கொண்டு சீரான மின் விநியோகம் செய்வதற்காக மின்வாரியத்தின் சார்பில் 12,000–க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் தங்களை பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்கள் இரவு, பகல் முழுவதுமாக இதற்கான பணிகளில் ஈடுபட்டு சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. சென்னை மற்றும் புறநகர் பகுதியில் 4,000 களப்ணியாளர்கள் முழுநேரமும் களப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள். மேலும், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரத்தில் 1,350 களப்பணியாளர்களும், கடலூரில் 1,800 களப்பணியாளர்களும், நாகப்படினம் மற்றும் மயிலாடுதுறையில் 926 களப்பணியாளர்களும், தஞ்சாவூரில் 1,568 களப்பணியாளர்களும், திருவாரூரில் 435 களப்பணியாளர்களும், செங்கல்பட்டில் 2,049 களப்பணியாளர்களும் சீரான மின்விநோயகம் வழங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மழையினுடைய அளவு அதிகமாக இருந்தால் கூட சென்னையை தவிர மற்ற எந்த மாவட்டத்திலும் பாதிப்புகள் இல்லை. மழையளவு அதிகமாக இருந்தால் கூட அதை எதிர்கொள்வதற்கு மின்வாரியம் தயராக இருக்கிறது. தமிழ்நாட்டில் 1,32,000 மின் கம்பங்கள் இப்பொழுது தயாரக கையிருப்பில் உள்ளன. அதேபோல் 1,000த்திற்கும் மேற்பட்ட மின் மாற்றிகளும் தயராக உள்ளன. மேலும், இதர உபகரணங்களும் போதுமான அளவிற்கு கையிருப்பில் உள்ளன. சென்னை, ஓட்டேரி, குக்ஸ் ரோடு 110/33/11 கி.வோ துணை மின்நிலையத்தில் அதிகாலை மூன்று மணிக்கு பழுது ஏற்பட்டது. இதில் பாதிப்பு ஏற்பட்டவுடன், அதை உடனடியாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சேர்ந்து மாற்று ஏற்பாடு செய்து மின் விநியோகம் வழங்கப்பட்டது " என்று தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**